# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் திங்கள்கிழமை (ஜூலை 20) தொடங்கி ஆகஸ்ட் 13 வரை நடைபெறவுள்ளது.

   i. இக்கூட்டத் தொடரில், அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேடு, நீட் வினாத்தாள் கசிவு, பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு, திரிணமூல் காங்கிரஸ் அதிருப்தி எம்.பி.க்கள் விவகாரம் உள்ளிட்டவை முக்கியமாக எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

   ii. பரபரப்பான அரசியல் சூழலில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் திங்கள்கிழமை தொடங்கவுள்ளது. அண்மையில் மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட சில அவசர சட்டங்களுக்கு மாற்றான மசோதாக்கள் உள்பட 8 மசோதாக்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படவுள்ளன.

   iii. முக்கியமாக, வருமான வரி சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட உள்ளது. ரூபாயின் மீதான அழுத்தத்தைச் சமாளிப்பதற்காக வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கும் நோக்கில், அரசுப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் மூலதன ஆதாயங்கள் மீதான வருமான வரியிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விலக்கு அளித்து பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றாக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 38-ஆக உயர்த்தி பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதா, தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டத் திருத்த மசோதா, பிறப்பு - இறப்பு பதிவுச் சட்ட திருத்த மசோதா உள்ளிட்டவையும் தாக்கலாக உள்ளன.

   iv. தொகுதி மறுசீரமைப்புடன் இணைந்த மகளிர் இடஒதுக்கீடு அமலாக்கத்துக்கான அரசமைப்புச் சட்ட திருத்த மசோதா பட்டியலிடப்படவில்லை. எனினும், கூடுதல் மசோதாவாக அதை கொண்டுவர வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த மசோதா நிறைவேற மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவை.

2. *இறுதியில்* பிரான்ஸை 6-4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றியுடன் மூன்றாம் இடத்தைப் பெற்றது இங்கிலாந்து. கடந்த 1966-இல் உலகக் கோப்பை வென்றதற்குபின் தற்போது சிறந்த இடத்தைப் பெற்றது இங்கிலாந்து. இரு முறை சாம்பியன் பிரான்ஸ் போட்டியின் தொடக்கத்தில் பட்டம் வெல்லும் அணிகளில் ஒன்றாக கருதப்பட்ட நிலையில் பயிற்சியாளர் டிடியர் டெஸ்சாம்ப்ஸ் தோல்வியோடு விடைபெறுவது வேதனையை தந்துள்ளது.

   i. *முதல்* பாதியில் 4 கோல்கள் அடித்த இங்கிலாந்து, 2-ஆவது பாதியில் மேலும் 2 கோல்கள் அடித்தது. பிரான்ஸும் பதிலுக்கு 4 கோல்கள் அடித்தது. இரு அணி களும் மொத்தம் 10 கோல்கள் அடித்ததன் மூலம், 1982-க்குப் பிறகு ஒரு ஆட்டத்தில் அடிக்கப் பட்ட அதிக கோல்களுக்கான சாதனையும் படைப்பு.
   ii. பிஃபா உலகக் கோப்பை வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் மெஸ்ஸியை பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்தார் பிரான்ஸ் வீரர் எம்பாப்பே. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 2 கோல்களை பதிவு செய்தார். தற்போது எம்பாப்பே 22 கோல்களுடன் முதலிடத்திலும், மெஸ்ஸி 21 கோல்களுடன் இரண்டாமிடத்துலும், க்ளோஸ் 16 கோல்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.

3. *தில்லியில்* குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனை ஜான்சிபார் அதிபர் ஹுசைன் அலி மவின்யி சந்தித்துப் பேசினார்.

   i. *ஜான்சிபார்* தீவானது, தான்சானியா நாட்டின் தன்னாட்சிப் பகுதியாகும். அதன் அதிபர் ஹுசைன் அலி, இந்தியாவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
   ii. தில்லியில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை அவரது மாளிகையில் ஹுசைன் அலி சந்தித்துப் பேசினார்.
   iii. இந்தியா - தான்சானியா இடையிலான நீடித்த கூட்டுறவையும், இந்தியா- ஜான்சிபார் இடையே பல நூற்றாண்டுகளாக தொடரும் கடல்சார், பண்பாடு மற்றும் மக்கள் ரீதியிலான உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சிறப்புறவையும் மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
   iv. வர்த்தகம், முதலீடு, வளர்ச்சிக் கூட்டுறவு, சுற்றுலா, நீலப் பொருளாதாரம், கல்வி, பயிற்சித் திட்டங்கள், தொழில்நுட்பம் மற்றும் பன்னாட்டு அமைப்புகளில் ஒத்துழைப்பு என கூட்டுறவை வலுப்படுத்துவது குறித்து இரு

தலைவர்களும் ஆலோசித்தனர்.

v. இந்திய பயணத்தில், சென்னை ஐஐடி நிகழ்ச்சியில் பங்கேற்றது சிறப்புமிக்கது என்று கூறிய ஹுசைன் அலி, இருதரப்பு கல்வி ஒத்துழைப்பின் முக்கிய மைல்கல்லாகத் திகழும் சென்னை ஐஐடியின் ஜான்சிபார் வளாகத்தை நிறுவ இந்தியா வழங்கிய ஆதரவையும் பாராட்டினார்.

vi. பொதுவான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்காக முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தி, தான்சானியா மற்றும் ஜான்சிபாருடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா உறுதியாக இருப்பதாக குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகி ருஷ்ணன் குறிப்பிட்டார்.

4. ஆந்திரத்தில் கரோனா பாதிப்பு கண்டறியப்பட்ட 4 நோயாளிகளின் மாதிரிகளில் ஒமைக்ரான் ஆர்எஃப்.5 திரிபு கண்டறியப்பட்டதாக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் சத்ய குமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

i. ஆந்திரத்தின் கடப்பா மாவட்டத்தில் 4 பேருக்கு கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், அவர்களுடைய மாதிரிகளை புணேயில் உள்ள தேசிய தீநுண்மியியல் நிறுவனத்துக்கு (என்ஐவி) மாநில சுகாதாரத் துறை அனுப்பியது.

ii. மரபணு வரிசைபடுத்துதல் முறையில் ஒமைக்ரானின் திரிபான ஆர்எஸ்.5 அந்த மாதிரிகளில் கண்டறியப்பபட்டது.

iii. ஆர்எஸ்.5 என்பது கரோனா தீநுண்மியின் திரிபான ஒமைக்ரானின் திரிபாகும். உலகின் பல பகுதிகளில் கண்டறியப்பட்ட ஒமைக்ரான் திரிபுகளில் இதுவும் ஒன்று' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

iv. அந்தத் திரிபு குறித்து உலக சுகாதார அமைப்பு (டபிள்யுஎச்ஓ) கண்காணித்து வருகிறது. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில், பிற ஒமைக்ரான் திரிபுகளைவிட ஆர்எஸ்.5 திரிபு மிகவும் ஆபத்தானது எனக் கண்டறியப்படவில்லை. எனவே, அது குறித்து மக்கள் பதற்றம் அடைய வேண்டாம் எனவும் விழிப்புணர்வுடன் செயல்படுவது மட்டுமே தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ருமேனியா ஆகிய மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கான அரசுமுறைப் பயணமாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

i. இந்தப் பயணத்தின் மூலம் வர்த்தகம் தொழில்நுட்பம் இருதரப்பு மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்ளிட்ட துறைகளில் மேற்கண்ட நாடுகளுடன் இந்தியாவின் உறவுகள் வலுப்படும் என்று குடியரசுத் தலைவர் மாளிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

- ம ாால்டோவா, வடக்கு மாசிடோனியா, ருமேனியா ஆகிய மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கான அரசுமுறைப் பயணத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.
- மால்டோவா, வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகளுக்கு இந்திய குடியரசுத் தலைவர் பயணிப்பது இதுவே முதல்முறையாகும். ருமேனியாவைப் பொருத்தவரை 30 ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு இந்திய குடியரசுத் தலைவர் செல்கிறார்.
- மால்டோவாவில் திங்கள்கிழமை முதல் இருநாள்கள் பயணம் மேற்கொள்ளும் குடியரசுத் தலைவர், அந்நாட்டின் அதிபர் மையா சாண்டு, நாடாளுமன்ற தலைவர் ஈகோர் கிரோஸூ ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். அந்நாட்டில் வாழும் இந்திய சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளார்.
- வடக்கு மாசிடோனியா அதிபர் கோர்டானா சிலிஜானோவ்ஸ் கா-தவ்கோவாவின் அழைப்பின்பேரில் அந்நாட்டில் ஜூலை 21 முதல் 22 வரை பயணம் மேற்கொள்ளும் குடியரசுத் தலைவர் முர்மு, அவருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். பிரதமர் ஹிரிஸ்டிஜன் மிகோஸ்கியை சந்திப்பதுடன், அந்நாட்டின் நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார்.
- இறுதிக்கட்டமாக, ருமேனிய அதிபர் நிகுசோர் டான் அழைப்பின்பேரில் அந்நாட்டில் ஜூலை 23 முதல் 25 வரை குடியரசுத் தலைவர் பயணம் மேற்கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். இந்தப் பயணத்தில் அதிபர் நிகுசோர் டான், பிரதமர் இல்லி போலோஜன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், இந்திய சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை தெரிவித்துள்ளது.

6. தேசியபாடலான வந்தே மாதரத்தை அவமதிப்பது அல்லது அந்தப் பாடல் பாடப்படும்போது இடையூறு செய்வதை தண்டனைக்குரிய குற்றமாக்கும்

மசோதாவை, மாநிலங்களவையில் மத்திய அரசு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது.

i. தேசிய கௌரவம் அவமதிப்பு தடுப்புச் சட்டத்தின்படி தேசிய கொடி, அரசமைப்புச் சட்டம், தேசிய கீதம் ஆகியவற்றை சேதப்படுத்தினால் அல்லது அவமதித்தால், 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

ii. இதே சட்ட பாதுகாப்பை வந்தே மாதரம் பாடலுக்கும் அளிக்கும் நோக்கில், தேசிய கௌரவம் அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா 2026-ஐ மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்ய உள்ளார்.

iii. இந்த மசோதாவின்படி, வந்தே மாதரம் பாடலை அவமதிப்பது அல்லது அந்தப் பாடல் பாடப்படும்போது இடையூறு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். தேசிய கீதமான 'ஜன கண மன'-வுக்கு உள்ள சட்டப் பாதுகாப்பை வந்தே மாதரத்துக்கும் அளிக்க, இந்த மசோதா வழிவகை செய்கிறது.

iv. பக்கிம் சந்திர சாட்டர்ஜியால் இயற்றப்பட்ட வந்தே மாதரம் பாடல், கடந்த 1875-ஆம் ஆண்டு நவம்பரில் வங்கதர்ஷன் இலக்கிய இதழில் முதல்முறையாக வெளியிடப்பட்டது. அந்தப் பாடல் வெளியிடப்பட்டு 150 ஆண்டுகளான நிலையில், தற்போது இந்த மசோதா கொண்டுவரப்பட உள்ளது.

v. முன்னதாக ஜன கண மன பாடப்படும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் கட்டாயம் வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய உள் துறை அமைச்சகம் கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது.

7. பொதுசிவில் சட்ட வரைவு மசோதாவுக்கு மத்திய பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

i. பொது சிவில் சட்ட மசோதாவுக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த மசோதாவானது பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நடவடிக்கைகளில் முக்கியமானதாகும். இந்த வரைவு மசோதாவை உருவாக்குவதற்கான குழுவின் முன் 80 சதவீத முஸ்லிம் பெண்களும், 40 சதவீத முஸ்லிம் ஆண்களும் அதை ஆதரித்தனர்.

ii. புதிய மசோதாவின்படி ஆண்களுக்கான திருமண வயது 21 ஆகவும், பெண்களுக்கு 18 ஆகவும் நிர்ணயிக்கப்படுகிறது. பொது சிவில்

சட்டத்தின்படி திருமணத்தைப் பதிவு செய்வது கட்டாயமாகும்.

8. பெருநகரங்களில் முறையற்ற கழிவு மேலாண்மை என்பது பருவநிலை மாற்றத்திற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

(i) புவி வெப்பமடைதலில் மீத்தேனின் பங்கு

- மீத்தேன் ($CH_4$) மிகவும் வீரியமிக்க பசுமை இல்ல வாயுக்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) விட, வளிமண்டலத்தில் வெப்பத்தைத் தக்கவைக்கும் திறன் மீத்தேனுக்கு மிக அதிகம்; எனவே, மிகக் குறைந்த அளவு வெளியேற்றப்பட்டாலும் அது புவி வெப்பமடைதலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- தொழில் புரட்சிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில், வளிமண்டலத்தில் மீத்தேனின் அளவு சுமார் 188% அதிகரித்துள்ளது.

(ii) கழிவு புள்ளிவிவரங்கள் மற்றும் குப்பை கொட்டும் இடங்களின் (Landfill) மேலாண்மை

- சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் தினமும் ஆயிரக்கணக்கான டன் திடக் கழிவுகள் உருவாகின்றன.
- சென்னையில் மட்டும் தினமும் சுமார் 6,500 டன் திடக் கழிவுகள் உற்பத்தியாகின்றன.
- இந்தக் கழிவுகள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் தளங்களில் கொட்டப்படுகின்றன; இவை இரண்டும் இணைந்து சுமார் 450 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளன.
- இத்தளங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளில் சுமார் 60% மக்கும் தன்மை கொண்ட கழிவுகளாக (கரிமப் பொருட்கள்) உள்ளன.

(iii) மீத்தேன் உருவாகும் முறை

- வீடுகள், உணவகங்கள், சந்தைகள் மற்றும் திருமண மண்டபங்களில் இருந்து வரும் மக்கும் கழிவுகள் பெரும்பாலும் பிளாஸ்டிக் கழிவுகளுடன் கலக்கப்படுகின்றன.
- இந்தக் கலவை குப்பை கொட்டும் தளங்களில் கொட்டப்படும்போது, அதிலுள்ள கரிமப் பொருட்கள் ஆக்சிஜன் இல்லாத சூழலில் (anaerobic conditions) சிதைவடைகின்றன; இது பெருமளவில் மீத்தேன் வாயு வெளியேறக் காரணமாகிறது.

- 2016-ஆம் ஆண்டின் திடக் கழிவு மேலாண்மை விதிகள், கழிவுகளை நான்கு வகைகளாகப் (மக்கும் கழிவு, மறுசுழற்சிக்குரிய கழிவு, அபாயகரமான கழிவு மற்றும் சுகாதாரக் கழிவு) பிரிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினாலும், இது முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

(iv) சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள்

- தீவிர வெப்ப அலைகள், திடீர் கனமழை, நகர்ப்புற வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றுடன் இந்த வாயு வெளியேற்றத்திற்குத் தொடர்பு இருப்பதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

- மீத்தேன் எளிதில் தீப்பற்றக்கூடியது என்பதால், கோடைக்காலத்தில் குப்பை கொட்டும் தளங்களில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளுக்கு இதுவே முக்கிய காரணமாக அமைகிறது; இத்தீ விபத்துகள் நச்சுப் புகையை வெளியிட்டு காற்றை மேலும் மாசுபடுத்துகின்றன.

(v) முன்மொழியப்பட்ட தீர்வுகள் மற்றும் உத்திகள்

- குப்பை கொட்டும் தளங்களுக்கு அனுப்பப்படும் கழிவுகளின் அளவைக் குறைக்க, வீட்டு அளவிலேயே கரிமக் கழிவுகளை உரமாக மாற்றுதல்.
- சமூக மக்கும் உரம் தயாரிப்பு மையங்களை (Community Composting centers) அமைத்தல் மற்றும் சந்தைகள், திருமண மண்டபங்கள் போன்ற அதிகக் கழிவு உருவாகும் இடங்களில் உயிரி-மீத்தேன் உற்பத்தி நிலையங்களை (Bio-methanation plants) நிறுவுதல்.

- குப்பை கொட்டும் தளங்களிலிருந்து வெளியேறும் மீத்தேனைச் சேகரித்து பயன்படுத்திக்கொள்ளும் வகையில், 'குப்பை மேட்டு வாயு சேகரிப்புத் திட்டங்களை' (Landfill Gas Capture projects) செயல்படுத்துதல்.

- அனைத்து நகராட்சிகளிலும் "கழிவற்ற வார்டு" (Zero Waste Ward) மாதிரியை நோக்கிச் செயல்படுதல் மற்றும் பள்ளிகள், கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

திடக்கழிவு மேலாண்மையில் உள்ள கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளுக்குத் தீர்வு காணாமல், பருவநிலை மாற்றத்திற்கான இலக்குகளை அடைவது சாத்தியமற்றது.

## 9. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் (ISRO) விஞ்ஞானிகள் வெளியேறும் சவால் மற்றும் தனியார் துறை போட்டியின் தாக்கம்.

(i) தனியார் துறையின் எழுச்சி

- இந்தியாவில் தற்போது 400-க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விண்வெளித் துறை சார்ந்த ஸ்டார்ட்-அப் (start-up) நிறுவனங்கள் உள்ளன.
- இந்த நிறுவனங்கள் சுமார் ₹50,000 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளன; இதில் 2025-ஆம் ஆண்டில் மட்டும் ₹15,000 கோடி திரட்டப்பட்டுள்ளது.
- தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முதல் உள்நாட்டு ராக்கெட்டான 'விக்ரம்-1' (Vikram-1) வெற்றிகரமாக ஏவப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்; அதே வேளையில், இது திறமையாளர்களை ஈர்ப்பதற்கான போட்டியை அதிகரிப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

(ii) பெருமளவிலான ராஜினாமாக்கள் மற்றும் திறமையாளர்கள் வெளியேற்றம்

- சமீபகாலமாக, 100 முதல் 120-க்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த விஞ்ஞானிகள் தனியார் நிறுவனங்களில் சேருவதற்காக ISRO-விலிருந்து தாமாக முன்வந்து ராஜினாமா செய்துள்ளனர்.
- குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளான மையங்கள்:
- யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையம் (URSC), பெங்களூரு: 80-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறியுள்ளனர்.
- விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC), திருவனந்தபுரம்: 20-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வெளியேறியுள்ளனர்.
- தனியார் துறை வழங்கும் அதிக ஊதியம் மற்றும் சிறந்த சலுகைகளால் விஞ்ஞானிகள் ஈர்க்கப்பட்டு வெளியேறுகின்றனர்.
- வெளியேறும் நபர்கள் குறிப்பிட்ட விண்வெளித் தொழில்நுட்பங்களில் சிறப்புத் திறன் கொண்ட தொழில்நுட்ப நிபுணர்கள் ஆவர்; இதனால் அவர்களின் இடங்களை உடனடியாக நிரப்புவது ISRO-விற்கு மிகவும் சவாலானதாக உள்ளது.

(iii) செயல்பாட்டு மற்றும் உத்திசார் அபாயங்கள்

- ககன்யான்' (Gaganyaan) போன்ற லட்சியமிக்க தேசியத் திட்டங்களை ISRO முன்னெடுத்துச் செல்லும் வேளையில் இந்தத் திறமையாளர்கள் வெளியேற்றம் நிகழ்ந்து வருகிறது.
- விஞ்ஞானிகளின் பெருமளவிலான வெளியேற்றம், ISRO-வின் எதிர்காலத் திட்டங்களின் ரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.
- தற்போதைய திறன்களை வளர்ப்பதற்காகப் பல தசாப்தங்களாக வரி

செலுத்துவோரின் ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை அரசு ISRO-வில் முதலீடு செய்துள்ளது; இந்த நிபுணத்துவத்தை தனியார் துறையிடம் இழப்பது பொது முதலீட்டின் குறிப்பிடத்தக்க இழப்பாகும்.

- மற்ற விண்வெளி வல்லரசு நாடுகளை விட மிகக் குறைந்த செலவில் செயற்கைக்கோள்களை ஏவும் திறனுக்கு ISRO உலகளவில் புகழ்பெற்றது; அதன் முக்கியக் குழு பலவீனமடைந்தால், இந்தப் போட்டித்தன்மை சார்ந்த சாதகமான நிலை பாதிக்கப்படக்கூடும்.

(iv) பணியாளர் மற்றும் காலிப்பணியிட புள்ளிவிவரங்கள்

- ISRO-வில் தற்போது 2,600-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ளன; நிறுவனத்தின் செயல்பாட்டு வேகத்தைத் தக்கவைக்க இவற்றை உடனடியாக நிரப்ப வேண்டியுள்ளது.

(v) கொள்கை மாற்றங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

- 2020-ஆம் ஆண்டில் விண்வெளித் துறையில் தனியார் துறை நுழைய அனுமதிக்கப்பட்டாலும், 2023-இல் வெளியிடப்பட்ட முறையான கொள்கையே தற்போதைய திறமையாளர்கள் இடமாற்றத்தை (talent shift) துரிதப்படுத்தியது.
- இச்சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சில முக்கியப் பிரிவுகளில் பணியாற்றும் விஞ்ஞானிகளிடமிருந்து தன்னார்வ ஓய்வு அல்லது ராஜினாமா கடிதங்களைப் பெற வேண்டாம் என்று இஸ்ரோவிற்கு (ISRO) மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- ராஜினாமா மற்றும் ஓய்வு தொடர்பான விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்துள்ளார். இனி, ஒரு விஞ்ஞானி பணியிலிருந்து விலகுவதற்கு முன்னதாக, அவரது ராஜினாமா கடிதம் இறுதி ஒப்புதலுக்காக விண்வெளித் துறைக்கு (Department of Space) அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தனியார் துறையின் பங்களிப்பு அவசியமான அதே வேளையில், இச்செயல்முறையின்போது இஸ்ரோ போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் பலவீனமடையவோ அல்லது அவற்றின் கட்டமைப்பு சிதையவோ கூடாது என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

## 10. தமிழ்நாட்டில் பேருந்து போக்குவரத்தின் தற்போதைய நிலை குறித்த பகுப்பாய்வு.

(i) பேருந்து போக்குவரத்தின் வரலாற்று மைல்கற்கள்

- தனியார் பேருந்து சேவைகள் முதன்முதலில் 1912-ல் டிவிஎஸ் (TVS) குழுமத்தால் தொடங்கப்பட்டன; அதனைத் தொடர்ந்து 1920-ல் கோயம்புத்தூரில் ஜி.டி. நாயுடுவின் பேருந்து சேவைகள் தொடங்கின.
- 1947-ல், சென்னை மாநகரில் 30 பேருந்துகளைக் கொண்ட ஒரு சிறிய தொகுப்பை அரசு இயக்கத் தொடங்கியது.
- 1971-ல் சோமசுந்தரம் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 120 கி.மீ-க்கு மேற்பட்ட தொலைவு கொண்ட பேருந்து வழித்தடங்கள் தேசியமயமாக்கப்பட்டன.
- 1972-ல், 1,029 பேருந்துகளைக் கொண்ட ஆரம்பகட்ட தொகுப்புடன் அரசுப் போக்குவரத்துக் கழகம் முறையாக நிறுவப்பட்டது.

(ii) தற்போதைய அளவு மற்றும் புள்ளிவிவரங்கள்

- தமிழ்நாட்டில் தினமும் சராசரியாக 1.8 கோடி (18 மில்லியன்) மக்கள் நகர மற்றும் வெளியூர் பேருந்துகளில் பயணிக்கின்றனர்; பண்டிகைக் காலங்களில் இ எண்ணிக்கை இருமடங்காக உயர்கிறது.
- மாநிலம் தற்போது 21,000-க்கும் மேற்பட்ட அரசுப் பேருந்துகளையும், சுமார் 3,000 தனியார் பேருந்துகளையும் இயக்குகிறது.
- பல்வேறு மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் 1 லட்சத்திற்கும் (100,000) மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

(iii) பயணிகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள்

- நகரப் பேருந்துகள் பெரும்பாலும் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் நிற்பதில்லை; பெண்களுக்கு இலவசப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இச்சிக்கல் அதிகரித்துள்ளது.
- 60–80 கி.மீ வழித்தடங்களில் இயங்கும் புறநகர்ப் பேருந்துகள், தங்கள் பாதையில் உள்ள சிறிய கிராமங்களிலிருந்து பயணிகளை ஏற்ற மறுக்கின்றன.
- சில ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களின் கனிவற்ற நடத்தை மற்றும் பயணிகள் மீதான மரியாதைக் குறைவு ஆகியவை குறித்து அடிக்கடி புகார்கள் எழுகின்றன.
- அதிக கட்டணம் வசூலிப்பதற்காக, சேவையில் எந்த உண்மையான முன்னேற்றமும் இன்றி, வெறும் பெயர் பலகையை மட்டும் மாற்றி சாதாரணப் பேருந்துகள் "எக்ஸ்பிரஸ்" (Express), "எல்.எஸ்.எஸ்" (L.S.S - குறிப்பிட்ட நிறுத்தங்கள் கொண்ட சேவை) அல்லது "பாயிண்ட்-டு-பாயிண்ட்"

(Point-to-Point) பேருந்துகளாக மாற்றப்படுகின்றன.

- நான்கு வழிச் சாலைகள் உருவாக்கப்பட்ட போதிலும், பல சிறிய கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன; ஏனெனில் பேருந்துகள் அவற்றின் நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களின்படி அக்கிராமங்களுக்குள் செல்வதில்லை.

(iv) மேம்பாட்டிற்கான உத்திசார் பரிந்துரைகள்

- அனைத்துப் பேருந்துகளிலும் ஜிபிஎஸ் (GPS) பொருத்தப்பட வேண்டும்; மேலும் பயணிகள் பேருந்தின் இருப்பிடத்தை நிகழ்நேரத்தில் (real-time) கண்காணிக்க ஒரு மொபைல் செயலி வழங்கப்பட வேண்டும்.
- பயணிகள் சிக்கல்களை உடனடியாகத் தெரிவிக்கும் வகையில், ஒவ்வொரு பேருந்திலும் புகார் எண்கள் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- தற்போதைய மக்கள் தொகை மாற்றங்களின் அடிப்படையில் பேருந்து வழித்தடங்களை அரசு முழுமையாக மறுஆய்வு செய்ய வேண்டும்; அத்துடன் சிறிய நகரங்களுக்கான 'இணைப்புப் பேருந்து' (Link Bus) சேவைகளை அதிகரிக்க வேண்டும்.
- நீண்ட தூரப் பேருந்துகள் குறிப்பிட்ட கிராமப்புற நிறுத்தங்களில் மட்டுமே நிற்க வேண்டும் என்ற விதியை அதிகாரிகள் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும்.
- பேருந்துகள் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும்; பாதுகாப்பிற்காக சிசிடிவி (CCTV) வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள் அவற்றில் இடம்பெற வேண்டும்.
- பேருந்து நிலையங்களில் துல்லியமான நேர விவரங்கள் மற்றும் வழித்தடத் தகவல்களை வழங்கும் டிஜிட்டல் தகவல் பலகைகள் அமைக்கப்பட வேண்டும்.
- போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்துப் பணியிடங்களையும் அரசு உடனடியாக நிரப்ப வேண்டும்; மேலும், ஜெர்மனியில் உள்ள முறையைப் பின்பற்றி, வெறும் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து மாறி, சேவை சார்ந்த செயல்பாட்டு முறைக்கு மாற வேண்டும்.